30.04.2024
அரியலூர்.

# அறிவிப்பு

## சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு தன்னார்வலர்கள் விண்ணப்பிக்கலாம்

**அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவருமான திரு. M. கிறிஸ்டோபர், B.A., B.L., அவர்கள் வெளியிடும் செய்திக்குறிப்பு:** அரியலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, அரியலூர் மற்றும் வட்ட சட்டப்பணிகள்குழு, ஜெயங்கொண்டம் மற்றும் செந்துறை மூலம் பாமர மக்களுக்கு சட்ட உதவி வழங்கும் வகையில் 50 சட்ட தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட), ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள், M.S.W பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் (அரசியல் சாராத அமைப்பைச் சேர்ந்தவர்கள்), மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளிர் குழுக்கள் மற்றும் அடிப்படை கல்வி தகுதியுடைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள் இந்த பணிக்கு விண்ணப்பிக்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, அரியலூர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது http://districts.ecourts.gov.in/ariyalur என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு வாயிலாகவோ விண்ணப்பத்தை பூர்த்தி செய்து மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, அரியலூர் அலுவலகத்தில் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வருகின்ற 15.05.2024–ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. நேர்காணலுக்கான தேதி, இடம் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் மேற்கண்ட இணையதளத்தின் வாயிலாகவும், தபால் மூலமாகவும் பின்னர் தெரிவிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை அணுகலாம்.

**பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:**

தலைவர் / முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
அரியலூர் – 621704.

ஒம்./– M. கிறிஸ்டோபர்,
தலைவர் / முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
அரியலூர்.

**சட்ட தன்னார்வலர்களுக்கான விண்ணப்ப படிவம்**

விண்ணப்பதாரர்
புகைப்படம்
(சுய சான்றோப்பம்
இடவும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | பாலினம் | : | |
| 5. | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 6. | விண்ணப்பதாரரின் மதம் மற்றும் வகுப்பு | : | |
| 7. | நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண் & மின்னஞ்சல் முகவரி | : | |
| 8. | தகவல் அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 9. | காவல் துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 10. | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம், எனில் அதன் விவரம் | : | |
| 11. | விண்ணப்பிக்கும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அல்லது வட்ட சட்டப்பணிகள் குழுவின் பெயர் | : | |

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே , உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்று ம் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை , சேவைக்கு தகுந்த வெகுமானம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**